சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ம்

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவு பெற்றது

Library
UNIVERSITY
JAFFNA

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
-6-
PERIODICALS
DIVISION

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை : சதம் 40

புத் - 93] யாழ்ப்பாணம்:- துந்துபி ஞு, சித்திரை மீ 16 23, 30-4-82 வெள்ளிக்கிழமை [இல-1

சைவமாம் சமயம் சாரும் சால்பு நெறி காட்டும்

# சைவ பரிபாலன சபை

சித்திரைத் திங்கள் விரோதி ஆண்டு சிவன் அடியார்கள் சிந்தையிலே திகழ்ந்த செம்மை நினைவுதான் சைவபரிபாலன சபையாகத்தோன்றி ஒன்பது பத்தாண்டுகள் கழிந்து நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்க உதித்த நிகழ்ச்சியாகும்.

நாடெலாம் நாவலர் மயமாய் மிளிர்ந்த காலம் அக்காலம். நல்லைநகர் ஆறுமுக நாவலர் என்று வாழ்த்தாத நாவில்லாத காலம். உண்மைச் சைவ ஊழியர் ஒருவர் இவரே என்று உலகறிந்த காலம். சைவநெறி காத்த காவலன், இவர் காட்டிய வழியே உய்வைத் தரும் என்றுணர்ந்த உத்தமர்கள் வாழ்ந்த காலம்.

சிந்தையெல்லாம் சிவநெறியின்பாற்பட்டதாயிருக்கும் சிறந்த வேளை இது. வண்ணைச் சிவன் கோயில், நல்லைக் கந்தன் கோயில், திருக்கேதீஸ்வரத் தேன் பொந்து, கீரிமலை நாதர் ஆலயம் மாவைக்கந்தன் கோயில் அடியார்கள் சிவபணியாற்றும் சீலர்களாயுள்ள அந்நாளில் நாவலர்பாற் கற்ற பேரறிஞர்கள் அறிவுக்களஞ்சியமாக அமைந்திருந்தபோதிலே சைவ சமயபரிபாலன சபை எழுந்தது எழுந்தது சிவதொண்டு.

மூதறிஞர்கள் முன்னாள் மூட்டிவித்த சிவபோத நெறிக்குரிய மூதவை — யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை. அரச ஆணைபெற்றுப் பதியப்பெற்ற சபை — அனைத்துலகிலும் அபிமானத்துடன் வரவேற்கப்படும் பழம் பெருஞ் சபை இது.

—

## உள்ளத்தில் உமை பங்கன்பால் அன்பும் உந்துகரத்தில் உழவாரமும் கொண்டு திருத்தொண்டு புரிந்த அப்பர் அடியார் திருநாள்

சிவத் தலங்கள் ஒரு நூற்றிருபத்தைந்தைத் தரிசித்துத் தலப் பதிகங்கள் இருநூற்றெழுபத்தைந்தும் பொதுப்பதிகங்கள் முப்பத்தேழுமாக மூவாயிரத்தறுபத்தாறு திருப்பாடல்கள் திருவாய்மலர்ந்தருளிய திருநாவுக்கரசு சுவாமிகள் (சித்திரைச் சதய உத்தமர்) என்ன எடுத்துக் காட்டுகின்றார்?

திருச்சிற்றம்பலம்

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

திருச்சிற்றம்பலம்

இக் கருத்தினையே திருஅங்கமாலையும் கொண்டுள்ளது.

பிறவியெடுத்தது பிறவி நீக்கவே, இறந்து பிறப்பதற்கல்ல. அதற்குவழி ஐந்தெழுத்தோதுதல், அரன் புகழ் பாடுதல், ஆலயந்தொழுதல், அன்னம்பாலிக்கும் முன் அவனடி அருமலரால் அர்ச்சித்தல், அங்கமெலாம் அணியத் தகுதாம் அணியாய வெண்ணீறணிதல் என்ற ஒழுக்க நெறியை அப்பர் குருபூசைத் திருநாளில் எப்படியும் நினைந்து இவ்வண்ணம் வாழ்ந்து இறை அருள் பெற்றுய்வோமாக.

—

உ
திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைக்கைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே.

திருச்சிற்றம்பலம்

## இந்த மகாநாட்டுக்கு என்ன அதிகாரம் இந்துமதம் சார்பாகத் தீர்மானம்எடுக்க?

கொழும்பில் 21 - 25 திகதிகளில் 1982 ஆண்டு 4 ம் மாதம் நிகழ்ந்த 'அகில உலக இந்து மாநாடு' சார்பாகப் பிரதிநிதிகளாக அழைக்கப்பட்ட சபைகள், சங்கங்கள், மன்றங்கள் யாவை?

அவற்றின்விபரங்களை, இந்த மகாநாட்டை எழுந்தபாட்டில் நடத்திய அமைச்சர் வெளியிடுவாரா? வெளியிடும்பொழுதுதான் வெளி வரும் விபரீதம்?

இந்த மகாநாடு மகாநாடல்ல இலங்கையைப் பொறுத்தவரையிற்கூட, என்பது.

திருமண வீட்டிலே திரண்டசுற்றத்தவர்கள் ஒரு தீர்மானம் எடுப்பது போல் இருந்ததாம் 25-04-82 நிகழ்ந்த பேராளர் தீர்மானம். காரணம் — சபையென்று - சங்கமென்று சால்பு பெற்ற கணிக்கப்பட்டவையின் பிரதிநிதிகள் புறக்கணிக்கப்பட்டமையே. — —

## பெருந்திருவிழா

சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தானம பிரம்மோற்ஸவம் மங்களகரமான துந்துபி வருடம் சித்திரை மாதம் 15-ம் நாள் (29-4-82) புதன்கிழமை காலை 11-00 மணிக்கு துவஜாரோஹணமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் பகல், இரவு உற்சவங்கள் நடைபெறும். 23-ம் நாள் (6-5-82) வியாழன் இரதோற்ஸவமும் 24-ம் நாள் (7-5-82) வெள்ளிக்கிழமை தீர்த்தோற்ஸவமும் நடைபெறும்.

## இணுவில்

செகராசசேகரப் பிள்ளையார் மகோற்ஸவம்

இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் ஆலயத் திருவிழாக்கள் கடந்த 27-4-82 புதன்கிழமைகொடியேறித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வியாழக்கிழமை தேரும் வெள்ளிக்கிழமை தீர்த்தமும் நிகழவுள்ளன. — —

சிவ சமயச் செல்வர்களைச்

## செந்தமிழ் யாழ்ப்பாணம் தேடி வரவேற்கின்றது

அந்த 'அகில உலக இந்து மகாநாட்டுக்குப்' பேராளர்களாகவும் பார்வையாளராகவும் வந்த சிவசமயச் சீலர்களை. சிவநெறி திகழும் யாழ்ப்பாணம் 'சீர் பொலிக' என்று வரவேற்கின்றது.

வருகைதரும் பெரியார்கள் இந்த ஏற்புடைத்தான இடத்தில் ஏன் மகாநாடு கூட்டப்படவில்லை என்று எண்ணுவார்கள் என்பதற்கையமின்று.

எது பொருத்தம்? எதற்குரித்து உண்டென்று உணர்வதற்கும் மதிநுட்பம் மட்டுமல்ல மரபுப் பண்பும் அமைய வேண்டுமன்றோ?

## கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வர ஆலய தேவி மகோற்ஸவம்

26 - 4 - 82 திங்கள் ஆரம்பம்

ஸ்ரீ நகுலேஸ்வர ஆலய தேவி மகோற்ஸவம் 26-4-82 திங்கள் ஆரம்பம் சகல தேவர்கள் வசிப்பதற்கு இடமுயதும்: பூமிக்கு நடுவே நின்று உலகத்தை நிலைபெறச் செய்வதும் ஆகிய மேருமலையின் சிகரம் ஒன்றைப் பெற்றதும் விராட் புருடனின் நடுநாடியாக உள்ளதும்: நவகோடி சிவாலயங்கள் உள்ளதும்: சிவநேசனுகிய குபேரனுலும்: தலைசிறந்த சிவனடியானுக இரண்டாவதாக எண்ணப்பட்ட இராவணேஸ்வரனுலும் ஆளப்பெற்றதும்; வால்மீகிப் பெருமானுல் வாயாரப் புகழப்பெற்றதும்; தேவாரம்; திருவாசகம், திருப்புகழ் முதலிய திருப்பாடல்களைப் பெற்றதும் இலங்கையின் வடபாகத்தில் உள்ள நகுலேஸ்வரம், திருத்தம்பலேஸ்வரம், வீணுகானபுரம், கீரிமலை எனப் பல திருநாமங்கள் பெற்று விளங்குவது; தீர்த்தம், மூர்த்தி, தலம் என்ற மூன்றிலும் சிறப்புற்றதும் தக்ஷிண கைலாச மான்மியம்; சூதசம்கிதை, மச்சபுராணம் முதலிய பலவற்றுள் வியந்து கூறப்பெற் நகுலமுனிவருக்குக் கீரிமுகத்தையும்; மாருதப்புரவீகவல்லிக்குக் குதிரைமுகத்தையும் மாற்றி ஆட்கொண்டதும்; சசங்கிதன் முசுகுந்தன், நளன், அருச்சுனன், முதலிய சக்ரவர்த்திகளுக்கும் வேறு பலருக்கும் பெரும் வரம் தந்ததும்; ஆனந்தோராம ஸ்தா

( வளர்ச்சி 2 ம் பக்கம் )

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

துந்துபி ஞு சித்திரை மீ 16 23, 30-4-82 வெள்ளி


நாவலர் மூச்சில் எழுந்த சபைக்கு

## இந்து மாநாட்டில் இடமில்லையாம்!

மிகுடம் அனைத்துலக இந்து மகாநாடு. ஆனால் 'ஒய்யாரக் கொண்டையுந் தாழம் பூ' அலங்காரமமட்டும் போல மேல்வண்ணம்; உள்ளே பார்த்தால் ஒறு வாய் என்று சொல்லும் அளவுக்கு அமைப்பின் ஒழுங்கு நிலை குலைந்திருந்தது.

அனைத்துலகிலே இலங்கை ஒன்று. இலங்கை என்று இயம்பும்பொழுது யாழ்ப்பாணம் இயல்பாகவே எண்ணத்தில் உதிக்கும்.

உலகம் அளாவிய உக்நத நிலையில் உத்தம புருடர்களாய் உள்ளவர்கள் உதித்த பேரூரும் யாழ்ப்பாணமே.

நல்லை நகர் ஆறுமுக நாவலர், மானிபம்பதி பொன் இராமநாத வள்ளல் என்ற நன்னுமங்களை யார் மறக்க முடியும்!

மாலைவ, நகுலேஸ்வரம் நல்லை ,வண்ணை. சந்நிதி என்றின்னோரன்ன திருத்தலங்களின் ஆதீனகர்த்தாக்களை எண்ணத்திற் கொள்ளாதிருக்கமுடியுமா?

நாவலர் மூச்சில் நல்லடியார்கள் இற்றைக்குத் தொண்ணூற்று மூன்றுண்டுகளுக்கு முன் நாட்டிய யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை அனைத்துலகுக்கும் உரிய அரும்பெரும் அறிஞர் களஞ்சியம்.

வித்துவ சிரோமணி, நாவலர் நன்மாணுக்க மருகர் பொன்னம்பலபிள்ளை திருவிதாங்கூர் உயர்நீதிமன்றின் அரசர் செல்லப்பாபிள்ளை, வள்ளல் பொன் இராமநாதன் வீரர் ஆம்விருது பெற்ற அம்பலவாணர் கனகசபை, வைத்தியலிங்கம் துரைசுவாமி. சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை நீராவியடிப் பெரியார் அ. தில்லையம்பலம், வண்ணைப் பசுபதிச் செட்டியார், சைவ வித்தியா விருத்திச் சங்க உயிர்நாடி சு. இராசரத்தினம், முன்னாள் சட்டநிருபண சபை அங்கத்தவர் அ. சபாபதி, பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர், நாவலர் தமையனார் மகனார் த. கயிலாயபிள்ளை ஆதியாம் பேரறிஞர்கள் நடத்திய சபை — தொடர்ந்து தொண்ணூற்றுநாலாம் ஆண்டில் சித்திரைத் திங்களில் அடியெடுத்து வைக்கும் சபை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை.

இச் சபைக்கு இந்த அனைத்துலக இந்து மகாநாட்டில் இடமில்லையாம்! விந்தை இதைவிட வேறென்றுளதாமோ!

நம. சிவப்பிரகாசம் அவர்களுக்கு அவரது இல்லத்து முகவரிக்கு அழைப்பிதழ் கிடைத்தது. இலக்கம் A 185. (ஆசனம் E வரிசை) அழைப்பை ஏற்று மாநாட்டுக்குச் சென்றோம் இந்துசாதனத்தை இயக்கும் எங்கள் சபைப்பிரதிநிதிகள் எவரையும் காண முடியவில்லை பொட்டிட்டாற்போல இச்சபை புறக்கணிக்கப்பட்டிருந்தது போல இருந்தது. அழைப்பின்பேரில் அங்கு சென்று ஆரம்ப நிகழ்ச்சிகளைக் கண்ணுறும் பொழுதெல்லாம் சபையின் எண்ணமே எழுந்தவாறிருந்தது.

அன்று காலை தினபதித் தினத்தாளில் யாம் புனைந்த வாழ்த்துப் பா வெளிவந்தது. சைவத் தமிழ் மரபு வாழ்த்துவதும் வரவேற்பதுமாகும். வந்த அலுவல் முடிந்ததாக வைத்துக்கொண்டு யாழ் நகரம் மறுபடியும்வந்து எங்கள் சபைக்கு அழைப்புக் கிடைத்ததா? என்று ஆராய்ந்தேம். அவ்வாறில்லை எனக் கண்டு மாநாடு சீராக அமையச் செயற்படுத்தாமையைப் பாராட்டுடன் ஓராட்டுப் பாடிவைக்க எண்ணினேம்.

சைவநெறிச் சால்புமரத் தாரணியில் ஓர் சபையாய்த் தொண்ணூற்று மூன்றுண்டுகளாக ஓங்கித் தொன்மை தழுவி நன்மைநெறிவழுவா தியங்கிவரும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை உரிய முறையில் அழைக்கப்படும் தகைமையில்லை என்று அனைத்துலக இந்து மகாநாடு கினைத்தமை இச்சபைக்கு நற்சான்றாக அம்மாநாட்டினர் நல்கிய நற் சான்று.

காய்தல்உவத்தல்இன்றி எம் பணியைக் கடமையாகக் கருதிச் சபையார் அச்சிட்ட நூல்கள் பலவற்றைக் கண்காட்சிக்கு உதவியது சபை — என்னே? நாவலர் நெறியில் நாவளவில் நிற்பேரர் போலாது அச் செம்மைச் சேவையில் ஈடுபடுவதால் என்க.

ஆனால் ஒன்றுமட்டும் அனைத்துலக இந்து மகாநாட்டைக் கூட்டிய அமைச்சருக்காக யாம் கூறுதும்

இந்துசமய அலுவல் அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு அமைச்சர் என்ற வகையில் என்றுமே வாராமையாற்போலும் நாவலர் நகரத்தை எண்ணத்தில் இருந்து நல்லமைச்சர் நழுவவிட்டனர் என்பது சாலும்!

மலேசியாவிலே 1976 ம் ஆண்டு நிகழ்ந்த அனைத்துலக இந்து மகாநாட்டிலே அங்கம் வகித்த சபை. சிதம்பரம் நாவலர் தரும சபையார் சட்டப்படி அங்கம் வகிக்கும்சபை, இலங்கைச் சட்ட அமைப்பின்படி சபையாக அங்கீகாரம் பெற்ற சபை இச் சபை.

ஒன்றின்மேற் கோபுரமாகத் தீபக்கோலங்கொண்டிருக்கும் சபை 'அனைத்துலக இந்து மகாநாட்டு'க் கண்ணுக்கு எட்டாதது பார்க்கும் பார்வைப் பழுதேயன்றிப் பார்வைக்குரிய பாரம்பரியம் படைத்த பழைய சபையின் வழுவன்று!

இந்துசமய அலுவல் அமைச்சர் எப்பொழுதாவது யாழ்ப்பாணத்துக்கு அமைச்சர் என்ற முறையில் வரும்பொழுதாவது இச் சபையைத் தரிசிப்பார் என்று நினைக்கின்றோம்.

அந்த நாளும் வந்தல்லவோ ஆகவேண்டும்!!

## தேவி மகோற்ஸவ விழா

(முதலாம் பக்க வளர்ச்சி)

பிக்கப்பட்டு விளங்குவது மகிமை இப்புண்ணியசேஷத்திரத்திலே அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் ஈழத்தில் முதன்மை பெற்ற நகுலேஸ்வரி பீடத்தில் எழுந்தருளிச் சகல ஆன்மாக்களுக்கும் வேண்டுவோர் வேண்டுவதை ஈந்து மோக்ஷத்தைக் கொடுக்கும் பொருட்டு; மூலாதாரம் ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என ஆறு சக்கரங்களில் வசிக்கின்றவளும் அநாதி அந்தமற்றவளும், உமையும், ஆகாசம் முதலிய எல்லாப் பூதங்களின் உருவாக இருப்பவளும், யோகி சிரேஷ்டர்களாலும், மிகச்சிறந்த யோகினிஎன்ற பரிவாரங்களின் கூட்டங்களாலும்பூசிக்கப்பட்டவளும் நகுலேஸ்வரிபீடத்தில் எழுந்தருளியிருப்பவளும், சகல மங்களத்தையும் செய்பவளும், வேண்டியவற்றை வேண்டியாங்கு அளிப்பவளுமாகிய அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகா தேவிக்கு மகோற்ஸவம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது.

துந்துபி ஞு சித்திரை 13 ம் நாள் 16-4-82 திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு மேல் வரும் சுபமுகூர்த்தத்தில் துவஜாரோகணமும், இரவு நவசந்தி ஆவாகனம், தொடர்ந்து பத்துத் தினங்களிலும் பகலில் காலை 9 மணிக்கும் இரவு 7 மணிக்கும் வசந்த மண்டப பூசையாகிப் பின திருவிழா நடைபெறும்.

5-5-82 புதன்கிழமை இரவு ஸ்படிக. சப்ர மஞ்சரோஹணக் காட்சி.

6-5-82 வியாழக்கிழமை 2 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று அருள்மிகு நகுலாம்பிகா தேவி சர்வாலங்கார பூஷிதையாய் பத்தர்கள் புடைசூழவும், வேதகோஷம் பண்ணிசை. சகல மங்கள வாத்தியங்கள் ஆகியன முழங்கவும் ரதத்தில் எழுந்தருளிக் காட்சி கொடுப்பாள்.

பிற்பகல் 5 மணி: பச்சை நிறமும் பவளச் செவ்வாயும் என்ற தத்துவப்படி பச்சைசாத்தி, தீபாலங்காரமாகித் திரு நடனத்துடன் தேவி யதாஸ்தானத்துக்கு எழுந்தருளுவாள். இரவு தேரடி உற்ஸவம் கற்பூரத் திருவிழா.

7-5-82 வெள்ளிக்கிழமை உதயத்தில் தேவி ஸ்ரீ கண்டகி தீர்த்தக் கூடத்துக்கு எழுந்தருளித் தீர்த்தோற்ஸவம்நடைபெற்று அன்று பகல் தீர்த்த மண்டபத்தில் இருந்து பக்தர்களுக்கு அனுக்கிரகிப்பாள்.

---

# சைவ பரிபாலன சபை

இலவசமாக நடாத்தும்

## அகில இலங்கைப் பண்ணிசைப்போட்டி

டி பண்ணிசைப் போட்டிகள் மேற்பிரிவு மத்திய பிரிவு கீழ்ப் பிரிவு எனும் பிரிவுகளில் எதிர் வரும் 30-5-82 இல் நடாத்தப்பெறும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாள் 20-5-82 ஆகும்.

ஒவ்வொரு பிரிவிலும் 1 ஆம் இடம் பெறுவோர் திரு. S. துரைராசசிங்கம் (மலேசியா) அன்பளித்த டாக்டர் ஆனந்தக குமாரசாமி ஞாபகார்த்தத் தங்கப்பதக்கங்கள் பரிசிலாக வழங்கப்படும். 1 ஆம், 2 ஆம் இடங்கள் பெறுவோர்க்குப் புத்தகப் பரிசில்கள் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்கள், பாடவிதானம் தேவையானோர் 50 சத முத்திரை ஒட்டிய சுய விலாசமிட்ட தபாலுறை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நடாத்தும்

## பண்டிதர் - சைவப்புலவர் தேர்வுக்கான

## இலவச வகுப்புகள்

7-4-82 ல் வகுப்புகளை பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் ஆரம்பித்து வைத்தார்.

பண்டிதர் வகுப்புகள்<br>சைவப்புலவர் வகுப்புகள் } சனி — ஞாயிறு நடைபெறும்;

இடம் : வண் / நாவலர் மகாவித்தியாலயம்,
நேரம் : காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.
விபரம் தேவையானோர் :
சைவப் புலவர் சங்கம், 125, அரசடி வீதி யாழ்ப்பாணம் எனும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

---

### சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்

சித்தாந்த பிரவேசபண்டிதர் தேர்வு 1981

சாத்திரம் 3 மணி

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1 உமது பாடப்பகுதியில் உள்ள ஐந்து சைவசித்தாந்த நூல்களின் பெயர்க்காரணம், ஆசிரியர் வரலாறு என்பனவற்றைச் சுருக்கமாக எழுதுக.

2 பதிமுதுநிலை அல்லது உயிரவைநிலை என்ற அதிகாரத்தில் கூறப்பட்டனவற்றைத் தொகுத்து எழுதுக

3 (அ) ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞான நடம்தான் நடுவே நாடு

(ஆ) அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப்பெருவெழுத்தும்
—நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி

இச்செய்யுளின் பொருளை எழுதுக.

4 சிறு குறிப்பு எழுதுக

| | |
|---|---|
| (அ) சிவரூபம் | (இ) சிவன் மூர்த்தர் |
| (ஆ) சிவதரிசனம் | (ஈ) நயனதீட்சை |
| (உ) மாயை | (ஊ) மன்னுபவம் |

5 திருவருட்பயன் நூலாசிரியர் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக

6 சிவஞானபோதம் 3ம், 4ம், 5ம் சூத்திரங்களை எழுதுக

7 முப்பொருள் அல்லது மும்மலம் பற்றிக் கட்டுரை வரைக

8 "சைவசித்தாந்தம்" என்னும் பொருள் பற்றிக் கட்டுரை வரைக

9 "வினாவெண்பா" என்னும் நூலின் அமைப்பினை எழுதுக

10 ஸ்ரீபஞ்சாக்ஷரத்தின் மகிமையை விளக்குக

# தான் பெற்ற தனம் தாரணிக்காகும்

## தானம் வழங்கும் தகையிளர் கண. சின்னப்பு

இறைவன் தருகின்றான் இறைவனுக்கு அதனை அர்ப்பணஞ் செய்வேன் என்று எண்ணுபவர்கள் இலைமறை காய்போலவே இந்நாட்டில் இருக்கின்றனர். எண்ணியபடி அறம் இயற்றுகின்றவர்கள் இன்னுஞ் சிலரே

இதற்கு எடுத்துக்காட்டாக இயங்குகின்றவர்கள் அளவையம்பதியைச் சேர்ந்தவரும் மலேசிய தேசவாசியுமாகும் திரு. கணபதிப்பிள்ளை சின்னப்பு ஆவர்

பொருள் வாய்ப்புப் பொருந்தாத குடும்பத்திற் பிறந்து அரும் பாடுபட்டுக் கல்வி பயின்ற அக்காலத்தில் உத்தியோகத்துக்கு ஓர் இடமாகியமலாயா நாட்டிலே தொழில் பெற்றுச் சிறிய வேதனத்துடன் பெருந் திருப்தியாகக் கடவுளுக்கு நன்றி செலுத்தியவண்ணமாக வாழ்ந்து வந்த திரு சின்னப்பு அவர்கள் காலப் போக்கிலே குபேரசம்பத்துடையவரானார். ஆனால் பொன்னும் பொருளும் அவரது உள்ளத்தை மின்னிமயக்கவில்லை. ஈசன் தந்தான் ஈசன் தருகின்றான் என்று இயல்பாகவே எழுந்து ஞானம் பெற்ற பொருளிற் சற்று வாழ்க்கை வசதியற்றவர்களுக்கு உற்றதாக்க எண்ணினார் இந்த உத்தமர்

பெருந் தொகைப் பொன்னை வங்கியில் வைப்பாக்கி வளரும் வட்டியில் நிரந்தர தர்ம நிலையங்களுக்குதவத் திட்டம் வகுத்தார். இந்த ஒப்பற்ற திட்டத்தில் ஒரு அம்சம் தாயகத்திலே குலதெய்வமாம் கும்பளாவளைக் கணபதி கோயில் இடமாக உதவி பெறவேண்டிய நிலைமையிலுள்ளவர்களுக்கு உதவ மூவர் கொண்ட இயக்குனர் குழுவை நியமித்து இந்த நியமத்துக்கு வேண்டிய பொன்னை விரும்பியபடி கொடுத்துவிடுகின்றார்.

வடமொழியிலும் தென்மொழியும் கற்றுக் கலைமாணியாய ஆசிரியராக இருந்த திரு. விசுவநாதன் உதவி அரசாங்க அதிபராக கடமை புரிந்த திரு. ம அருணாசலம் ஆசிரியர்

இவ் வைபவத்திற்கு நம. சிவப்பிரகாசம் தலைமை தாங்கினர். சிவநெறிப்புரவலர் க. கனகராசாவும், சைவப்பெரியார் செ. மயில்வாகனமும் கலந்துகொண்டனர்.

---

## சிறப்புச் சொற்பொழிவு

வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் நேற்று 29-4-82 வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் உலக இந்துமாநாட்டுக்கு வருகை தந்த பேராளர் இந்திய "மறுவாழ்வு" பத்திரிகையாசிரியர் திரு P வெங்கடேசன் அவர்கள் சமயச் சொற்பொழிவு நடத்தினர்.

---

# கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. 13999 / சடு.

பரமசிவம் சரோஜினிதேவி பொலிகண்டி மேற்கு வல்வெட்டித்துறை

வழக்காளி.

எதிராக

1. நல்லதம்பி பாக்கியலட்சுமி வல்வெட்டி வல்வெட்டித்துறை
2. குமரையா பரமசிவம் புலோலி தெற்கு புலோலி

- எதிராளிகள்.

மேற்குறித்த வழக்கின் தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்களை 1982 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ம் திகதி ( 7 - 6 - 1982 ) வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக இருந்து என்னால் முறையே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் மதிப்பிட்ட விலைகள்:—

1-ம் ஆதனம் ரூபா 6,000.

2-ம் ஆதனம் ரூபா 15,000.

### ஆதன இடாப்பு

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று நவிண்டில் குறிச்சியிலுறைசாணவாய்.

1. இறங்கியன் தோட்டம் நிப 8, 3/8 ஷெ நி. ப. 10½ இதில் 1 ம் துண்டும் 2 ம் துண்டில் வடக்குப் பக்கமாக அரைவாசிக்கும் நிப 3, 5/8 இதில் றோட்டுக்காகக் கழிக்கப்பட்ட நிலம் 5/8 மிகுதி நிப 13 ல் றோட்டுக்கு மேற்குப் பக்கமாக நி. ப. 8 இதில் தெற்குப் பக்கமாக நி. ப. 1½. எல்லை கிழக்கு குறித்த றோட்டு வடக்கு கணபதி வேலனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு வல்லி சின்னனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு கணபதிநாச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வேம்புகள் அடங்கலும்.

2. ஷெ மிறை இறங்கியன் தோட்டம் நிப 13 மேற் குறித்த றோட்டுக்கு கிழக்குப் பக்கத்திலுள்ள நிப 10 ல் தெற்குப் பக்கமாக நி. ப. 5 எல்லை கிழக்கு தம்பையா பென் தெய்வானைக்குரிய ஆதனம். வடக்கு சடையன் சின்னப்பொடியனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு றோட்டு தெற்கு ஆறுமுகம் கந்தசாமிக்குரிய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வேம்புகள் அடங்கலும்,

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 7375 உம் மேலும் வருடமொன்றுக்கு பத்து வட்டி வீதம் வழக்குத்தாக்கல் திகதியாகிய 1977ம் ஆண்டு ஆனி மாதம் 7 ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1979 ம் ஆண்டு ஆனி மாதம் 8 ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கு இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 5400 / 50, இதில் நடைபெற்றசெலவு ரூபா 189 / 35 நடைபெறவேண்டிய செலவு ரூபா 85 / 75. மேலதிக சமயா சமயச் செலவு ரூபா 75 /40 கொடுக்கவேண்டியிருக்கிறது.

புலோலி மேற்கு.
புலோலி,
29-4-82

க. நா. சுப்பிரமணியம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
1. J. 22 / 82.

---

## சைவ பரிபாலன சபை — யாழ்ப்பாணம்

## சித்தாந்த பாலபண்டிதர் பரீட்சை 1981

இலக்கியம் 3-00 மணி

1) பரிமேலழகரின் உரைச்சிறப்பினை விளக்கி நான்கு உதாரணங்கள் தருக
2) கல்வி அல்லது செங்கோன்மை பற்றித் திருவள்ளுவர் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக
3) முருகப் பெருமான் திருப்பெருவடிவம் பற்றி விளக்கமாக எழுதுக
4) கந்தர் கலி வெண்பா பாடியவர் யார்? அவரின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.
5) சிவராத்திரி விரத மகிமை பற்றிச் சிவராத்திரி புராணத்தை ஆதாரமாகக் கொண்டு கட்டுரை எழுது.
6) சேக்கிழார் பெருமானின் சிறப்பியல்புகளையும் பக்தித்திறனையும் விபரமாக எழுது.
7) பின்வரும் பாடல்களின் பொருளை எழுதுக
(அ) மணவினை காண்பான் வேதன் மாலரன்
றேவர் கோமா
னினையற முனிவர் கான மிசைத்த கந்தருவர்
சூழ்ந்தார்
பனைமுர சோதை யார்த்த பைந்தரு மலரின் மாரி
கனைமழை போலத் தூர்த்த கந்தனு மகிழ்ச்சி பூத்தான்
(ஆ) நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண் மாண் புனைபாவை அற்று
8) கந்தபுராணத்தில் சித்தாந்தக் கருத்துக்கள் அடங்கிய பாடல்கள் மூன்றினை இடஞ்சுட்டிக் காட்டுக
9) திருக்குறள் உலகப் பொதுநூலாக விளங்குகிறதென்பதற்குச் சான்றுகாட்டி விளக்கமாக எழுதுக
10) "கந்தர்கலி வெண்பா" பாராயணத்திற்குரிய சிறந்த நூலாகும் என்பதனை ஆதாரம் காட்டி நிறுவுக.

---

# Proposals for Reform in Education

(M. ELIATHAMBY)

Education, indispensable for the Young Children, helps them to earn their livelihood, to to bring out their latent talents, to be good citizens and to develop a well-integrated personality. It is the duty incumbent on the State and the Public to provide facilities to all school-going children to receive a general education and a subsequent education suited to their aptitudes and talents so that they may lead an independent happy life without being a burden to the Society. As the student population is increasing year after year, reforms in education also become a necessity and demand an overall change in the building, equipment, staff, administration and the method of approach to the imparting of knowledge, skills, attitudes and interests. Though a good slice of the natural income is spent on education, it is a matter of national importance, as the future of the country depends on the youths who are expected to receive a proper education and become worthy citizens. Education that is not imparted to suit the natural endowments and innate talents of the child is like driving a square peg into a round hole.

It is proposed that performance in the Examination at the end of Grade II will determine selection to collegiate and other tertiary level courses. This affects the children of poor parents. Children of rich parents receive the benefit of additional teaching in the tuition classes and tutories. The only remedy for it is to abolish all tutories in the Island and allow all the children both rich and poor to follow the lessons at school and to develop original thinking. Besides a well defined basis for selection to collegiate and other tertiary level courses is required to avoid clamour from parents.

It is strange that most of the matters relating to the child and the subject are mentioned elaborately having overlooked the most important factor, the Teacher It is the teacher under whose care the young children, the sons and daughters of the rich and the poor, the high and the low are entrusted He is the architect of the future citizens; he is the nation-builder. Such a person should occupy the forefront in the society and deserves encouragement from the State, from the parents and from the public.

Though the School Cluster system, an innovation, appears to reduce the expenses, it is likely to create problems difficult to solve. A cluster unit with a pupil population of 3000 to 5000 pupils will cover a large area with schools some miles apart. The cluster Principal will be responsible for the smooth working as regard to finance, staff admission, examination etc.

The feasibility of dealing with divers tasks in a cluster unit gives room for doubts as the cluster Principal has to deal with other principals of different academic qualifications and culture and also of schools of varying standard, The time spent by the cluster Principal on meeting other principals and vice versa entails loss of time and service to his own school. He serves more as a circuit Education Officer than a principal of a school. A uniform standard in all the schools in the cluster area cannot be maintained and therefore selection at the end of Grade II becomes difficult. If a school is left out of the cluster by virtue of its satisfactory resources there will be a rush for admission to that school. It is said that the core school of each cluster be developed in general to have superior laboratories, workshop, library, visual and co-curricular facilities which will be shared by other schools in the Cluster. Provision of enough periods for practical work in the laboratory and workshops for students of other schools in the same cluster involves lot of practical difficulties.

The minimum standard required for selection to the University has to be clearly stated to avoid clamour from parents and students.

Study of English literature should supplement the study of language. To acquire facility of expression in speech and writing, to enjoy reading the work of great writers and poets, study of prescribed texts is necessary. Some of the proposals for reform require further consideration before implementation.

Hindu Organ

Fri. 16, 23, 30-4-82

## CONFERENCES IN CONTRAST

Inspired by the enlightening thoughts of the revered Guru of Kamakodi Peedam of Kanchipuram, the idea of a World Hindu Conference was first practically worked out in the immediate presence of the Venerable Kanchi Periyavar. In consequence of this inaugural Conference, a full fledged World Hindu Conference was later convened with KualaLumpur, the Malaysian Metropolis, as the hosting venue, in the month of December, in the year one thousand nine hundred and seventy six, with Dr. T. M. P Mahadevan, of Madras, as President.

We are delighted to feel that a convenient opportunity has been created for us to view the so-called World Hindu Conference of 1982, recently held in the Capital City of Colombo, along with a review of that Conference in KualaLumpur in 1976 still fresh in our mind.

Long before the 1976 Conference was due to be held, delegates were invited from the various countries where Hindus resided; sufficient care was taken in the selection of delegates from Sri Lanka. The Jaffna Saiva Paripalana Sabhai was also rightly and appropriately called upon to name a delegate to the World Conference The Sabhai selected the Editor of the 'Hindu Organ' as its delegate.

The Delegation from Sri Lanka was under the distinguished leadership of Dr. K Kailasanatha Kurukkal, a Dean of the University of Jaffna. As Professor of Hindu Civilization and as a practising Kurukkal, Dr. Kailasanatha Kurukkal, was eminently qualified to preside over one of the sessions of THAT Conference. The entire congregation of delegates could see in Professor K. Kurukkal an ideal spokesman on behalf of Hinduism.

Every Dick, Tom and Harry of the Hindu Fold cannot nominate himself as a convener of a Hindu Conference, much less arrogate to himself the authority of speaking on behalf of the Hindus of the world. Dr. K. Kurukkal was there, of right by virtue his great scholarship and proven prowess as a performing Bhramin Kurukkal

It would certainly be relevant here to state that as part of the manifold activities of THAT World Hindu Conference, Bhrama Shri K. Kailasanathakurukkal functioned as the presiding Sivachariyar at a Changabishekam Ceremony held at the Kandaswamy Temple in Soot Road, KualaLumpur, and kept the vast congregation spell bound in spiritual attention for full four hours. The Venerable Kurukkal was very ably assisted by Bhrama Shri Sundramoorthy, Lecturer in the University of Malaysia.

Here we would with a feeling of glee refer our readers to the account of appreciation of Dr. Kurukkal's ability as a practising Sivachariyar that was published in the Inthusathanam of January 1977

Should we say anything more to distinguish THAT conference from THIS Conference!

The Saiva Paripalana Sabhai as such did not exist in the straying minds of the selfstyled conveners of THIS conference, although the Hindu Organ and the Inthusathanam had been featuring the preparatory announcements and programs of THIS Conference and had furnished the organizers of the Books Exhibition with copies of rare publications in English on Saivaisim. What a contrast between THAT Conference and THIS Conference.

Hindus must be full Hindus; neither alloys nor artificial make - shifts can pass for the pure stock. A Hindu, to assume representative authority as such must have received "Initiation" and should be an uncompromising Vegetarian. Any other pseudo - Hindu will be only profaning and polluting what is expected to be pure and entitled to respect.

Apart from this aspect, there is one very unpleasant thing that has discredited THIS Conference This Conference, held as it had been in Sri Lanka, should have invited ALL the Members of Parliament, Chairmen of District Development Councils and Mayors who profess the Hindu Faith for the one reason that they represent the people of whom most are Hindus None but two Members of Parliament coming under the category of Hindus attended This Conference Whether they were invited or not, we cannot say in a way the Hindu Members of Parliament are ipso facto delegates to such conferences.

The pomp, the pageant the profuseness of expenditure, that marked THIS Conference, notwithstanding, the general opinion is that the undertaking has not served its purpose or any useful purpose.

As for ourselves we are not concerned, with the financial aspect, nor do we have the right to comment on it. But what is there to prevent any Hindu Member of Parliament from raising a volley of questions in the proper place and even demanding auditing of the accounts.

That Conference of 1976 held in Kual Lumpur, hosted by the Hindu Association of Selangor, Malaysia stands, removed from THIS Conferences of 1982, supreme in its splendour, significance and scope.

We are eagerly awaiting for one conference such as that of 1976 so that Hindus of the world can feel that they can o right sit in a properly Constituted Conference.

## Prince of PAROPAKARAM
### AS A SPIRITUAL TEACHER
### Patriot Ponnampalam Ramanathan

*In this issue of the 'Hindu Organ' which is of special significance as marking the ninety fourth year of the Saiva Paripalana Sabhai and the conspicuous occasion of the Jayanthi of Sriman Ramanathan, a distinguished past president of the Sabhai, we approvingly make ant use of the studied reference to the spirit of RAMANATHA ILADCHIYAM drawn up by a Scholar, learned in the Shaiva Shastras as a devoted student of Saiva Periyar Sivapathasuntharampillai and Saiva Scholar Suppiah Natesapillai both contributors to the cultural progress of Parameswara College —now the proud premises of the University of Jaffna, namely Siddhanda Vithakar Murugesu Gnanapragasam B.A., B.SC, emeritus Principal of Parameswara College President Thiruketheeswaram Restoration Society, President Saiva Educational Society, member. Parameswara College Board of Directors and Steward of Eelaththu Sivanadiars—in the course of his highly educative research paper read at the Seminar of the World Hindu Conference held in Colombo on April 23, 1982 presided over by Justice Shri S. Sharvananda. Extracts from this excellent essay are published below: Ed. H, O.]*

Religion which is the highest knowledge and the highest wisdom cannot be acquired from books We may thrust our heads into all corners of the world, we may explore the Himalayas, the Moon and the solar systems, we may do the most recent researches in the quantum theory or the second Law of Thermodynamics, we may continue our further research on the proton and the neutron of the physicist or the unicellular Bacilli of the Biologist, we will not find religion anywhere, until our heart is ready for receiving it and our teacher has come to commune with us in the hitherto unspoken language of pure conciousness and unblemished love And when that divinely appointed teacher comes and we serve him with childlike confidence and simplicity freely opening our heart to his influence we will see in him the hitherto unknown God manifested. To those of us who seek God with such a spirit of love and veneration, to the spiritual teacher are revealed the most wonderful things about spiritual realities. All religions of this world are based on this simple religious fact of facts – the Spiritual Teacher.

This Teacher in Hindu tradition is called Jnana Guru. He is the Guru of all Gurus and in a way the God of all Gods, for he is the one who awakens us to a life of religion and love. No man can see God in His impersonal or absolute aspect except through Him Two kinds of men do not worship God in His manifested form as spiritual Guru The materialist who has no religion and the jivanmukta who has transcended the limits of his human nature. The former does not worship because of his ignorance and the latter because he has realized God in himself according to the Vedic formula "Atmanam atmani pasyet". Faith in one's gnana Guru is not easily acquired unless by divine appointment a bond of heavenly love is forged between the Guru and the disciple. This love will swell up and become an unceasing flow, if the disciple discovers that the Guru is equipped with not only unblemished love but also unblemished character and moral certitude.

(To be continued)

## Re - Establishing The Public Library —A RELIGIOUS GLORY

What was once the pride of the reading public of this country — the Jaffna Public Library — had been in the space of an hour reduced to ruins by a group of vicious ruffians. The loss in terms of money is large; but larger is the disadvantage that has resulted from this insensible incendiarism

Lovers of writings, books and other library publications have all risen to a man to render all possible help in re-establishing the damaged Library. It is in keeping with the zeal of the people of this area for preservation of books of knowledge that a spontane ous urge for supporting the restoration movement has been evident from the very moment of destruction of this library

The Mayor of Jaffna, has called for aid from all; it is our duty as citizens of this historic city to rally round this movement and restore the Library to its pristine glory and usefulness.

---

வானமுகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

---

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone: 356 ) on Friday, 16, 23, 30-4-82*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam